தினமலர்
உண்மையின் உரைகல்

## கோதுமை உற்பத்தியில் புதிய சாதனை

பிப்ரவரி 18,2012,01:51



புதுடில்லி:நாட்டின் கோதுமை உற்பத்தி, நடப்பு பயிர் பருவத்தில் (ஜூன்-ஜூலை), 8.8 கோடி டன்னாக உயர்ந்து புதிய சாதனை படைக்கும் என, மத்திய உணவு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

சென்ற பயிர் பருவத்தில் கோதுமை உற்பத்தி 8.68 கோடி டன்னாக இருந்தது. நடப்பு பருவத்தில், பஞ்சாப், அரியானா உள்ளிட்ட சில மாநிலங்களில் நோய் தாக்குதல் காரணமாக கோதுமை பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், கோதுமை விளைச்சல் பெரிய அளவில் பாதிக்கப்பட வாய்ப்பில்லை.

கோதுமை உற்பத்தி, மதிப்பீட்டை விட முன்னேற்றம் காணும். அதனால் கோதுமை உற்பத்தியில் எந்த பிரச்னையும் இல்லை.ஆனால், தேவைக்கேற்ப பருப்பு வகைகள் உற்பத்தி இல்லாதது கவலை அளிக்கிறது. தேவைக்கும், அளிப்பிற்கும் உள்ள இடைவெளியை குறைக்க வேண்டும். உணவு தானியங்கள் மற்றும் தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தி சிறப்பாகவே உள்ளது. ஆனால், இரண்டு துறைகளில் மட்டும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதில் பருப்பு வகைகள் ஒன்றாகும். நடப்பு பருவத்தில், பருப்பு உற்பத்தி 1.67 - 1.70 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதி மூலம் கூடுதல் தேவை சமாளிக்கப்படும்.

2009-10ம் ஆண்டு வரை நாட்டின் பருப்பு வகைகளின் உற்பத்தி 1.40 கோடி டன்னாக இருந்தது. இது, 2010-11ம் ஆண்டில் 1.82 கோடி டன்னாக அதிகரித்தது. தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், நாட்டின் 63.5 சதவீத மக்களுக்கு மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்குவதில் எந்த பிரச்னையும் இல்லை. இவ்வாறு சரத்பவார் தெரிவித்தார்.

---

## நடப்பு பருவத்தில் வரலாறு காணாத அளவில் நெல் கொள்முதல் உயரும்



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*நடப்பு ஆண்டில் செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் கொள்முதல் பருவத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு 3.50 கோடி டன் நெல் கொள்முதல் செய்ய இந்திய உணவு கழகம் திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் சிராஜ் ஹுசைன் தெரிவித்துள்ளார்.*

*பொது விநியோகம் மற்றும் அவசர தேவைகளின் நிமித்தமாக இக்கழகம் நெல் உள்ளிட்ட அத்தியாவசிய உணவு தானியங்களை கொள்முதல் செய்து வருகிறது.*

*கடந்த சந்தை பருவத்தில் 3.42 கோடி டன் நெல்லை கொள்முதல் செய்திருந்த இந்நிறுவனம், நடப்பு பருவத்தில் பஞ்சாபில் 77.31 லட்சம் டன்னையும், சத்தீஸ்கரில் 30.55 லட்சம் டன்னையும், ஆந்திர பிரதேசத்தில் 25.40 லட்சம் டன்னையும் கொள்முதல் செய்து இதுவரை மொத்தம் 2.00 கோடி டன் நெல் கொள்முதல் செய்துள்ளதாக ஹூசைன் மேலும் தெரிவித்துள்ளார். இந்நிறுவனம் சாதாரண நெல்லை கிலோ ரூ.10–க்கும், ஏ கிரேடு ரக நெல்லை கிலோ ரூ.10.30–க்கும் கொள்முதல் செய்கிறது. கடந்த 2010–11 வேளாண் பருவத்தில் நாட்டின் மொத்த தானிய உற்பத்தி 9.60 கோடி டன்னாக இருந்தது.*

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,850–2,950

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை 4,150.00

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 10,600.00

**கடலை புண்ணாக்கு**

70கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட ) 1,600.00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கொண்ட டின்
(வரி உள்பட) 1,627.00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருபால், பிள்ளையார், சீனிவாசா புவனேசுவரி,பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்
ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,750.00
அக்மார்க் 1750–1850

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 8,900.00
15கிலோ டின் (வரி உள்பட) 1,600.00

**சூரிய காந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ டின்
(வரி உள்பட) 1,150–1,155

**ரீபைண்டு ஆயில்**

சுத்திகரிக்கப்பட்டது.
15 கிலோ டின் (வரி உள்பட) 1,750–1,770

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,105–1,120

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 565.00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.17–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,650 | 85.00 |
| புளி (40கி) | ரூ. 3,600 | 98.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,400 | 78.00 |
| துபருப்பு | ரூ. 5,800 | 60.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 5,200 | 54.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,100 | 64.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,400 | 78.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,200 | 44.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3,900 | 44.00 |
| சுண்டல் கடலை | ரூ. 4,500 | 48.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 3,200 | 62.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,400 | 56.00 |
| கொள்ளு | ரூ. 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 4,800 | 51.00 |
| சர்க்கரை | ரூ. 2,940 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, பிப்.17–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 7,452
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8,436
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 9,912
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,842
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,067
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,404

டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 13,498

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.17–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36–46 | கலர்கோஸ் | ரூ. | 17–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 12–18 | புதினா | ரூ. | 20–00 |
| வெண்டைக்காய் | ரூ. | 19–26 | காலிப்பிளவர் | ரூ. | 12–18 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10–12 | பொறியல் தட்டை | ரூ. | 14–18 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10–12 | பச்சை மொச்சை | ரூ. | 20–26 |
| புடலை | ரூ. | 8–14 | தேங்காய் | ரூ. | 6–12 |
| பீர்க்கான்காய் | ரூ. | 19–22 | பட்டாணி | ரூ. | 30–80 |
| சுரைக்காய் | ரூ. | 9–10 | கறிவேப்பிலை | ரூ. | 46–00 |
| பாகற்காய் | ரூ. | 17–20 | பூண்டு | ரூ. | 36–110 |
| கொத்தவரை | ரூ. | 17–20 | அகத்தி | ரூ. | 20–00 |
| பூசணிக்காய் | ரூ. | 7–9 | வாழைக்காய் | ரூ. | 16–20 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–9 | குடைமிளகாய் | ரூ. | 48–00 |
| பேராக்காய் | ரூ. | 14–18 | சாதா பீன்ஸ் | ரூ. | 18–20 |
| பச்சை மிளகாய் | ரூ. | 17–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 36–40 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20–00 | கறிபீன்ஸ் | ரூ. | 18–20 |
| சின்னவெங்காயம் | ரூ. | 8–12 | புஸ்பீன்ஸ் | ரூ. | 22–24 |
| பெரியவெங்காயம் | ரூ. | 8–10 | காளான் | ரூ. | 80–150 |
| இஞ்சி | ரூ. | 18–20 | இளநீர் (ஒன்று) | ரூ. | 15–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 70–85 | திராட்சை | ரூ. | 40–80 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 14–20 | மாங்காய் | ரூ. | 30–50 |
| சேனைகிழங்கு | ரூ. | 12–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–18 |
| கருணைகிழங்கு | ரூ. | 18–00 | கொய்யா1கிலோ | ரூ. | 30–40 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 14–00 | மாதுளை1கிலோ | ரூ. | 90–120 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 10–14 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 10–12 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 10–14 | வரமிளகாய் | ரூ. | 80–90 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–00 | ஆப்பிள் | ரூ. | 100–140 |
| முள்ளங்கி | ரூ. | 8–12 | சாத்துக்குடி | ரூ. | 25–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18–22 | நெல்லிக்காய் | ரூ. | 30–36 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10–18 | ஆரஞ்சு | ரூ. | 40–00 |
| நூல்கோல் | ரூ. | 14–17 | வெள்ளரி | ரூ. | 14–34 |
| கொத்தமல்லி | ரூ. | 16–20 | புளி 1 கிலோ | ரூ. | 100–110 |
| டர்னிப்ஸ் | ரூ. | 14–17 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36–42 |
| முட்டைகோஸ் | ரூ. | 14–18 | அவரை | ரூ. | 10–14 |
| | | | நிலக்கடலை | ரூ. | 34–36 |
| | | | மக்காச்சோளம் | ரூ. | 12–24 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 28,700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 29,200 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 30,200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 13,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 6,500 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1,000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1,300 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 6,700 |
| கொப்பரை நாடன் | ரூ. 4,475 |
| கொப்பரை ராசு | ரூ. 4,275 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 4,475 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ. 6,800 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6,100 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 19,900 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 19,915 |
| ரப்பர் பால் | ரூ. 13,400 |
| காப்பி | ரூ. 10,100 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3,000 |
| நேந்திரகாய் | ரூ. 1,500 |
| இஞ்சி | ரூ. 400 |

## எண்ணை மார்க்கெட்

கோவைபிப்.17–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,830 | 120.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,180 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1,210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1080 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1230 | 80.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ.1,520 | 105.00 |
| தேங்காய்எண்ணை | ரூ.1,300 | 90.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ.1,470 | 100.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ.1,100 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ.1,600 | 110.00 |
| வனஸ்பதி | | |
| வில்லி டப்ஸ் பிராண்ட் | ரூ.1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ.1,030 | – |
| அபிராமிபிராண்டு | ரூ.1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ.1,050 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.191.00 | அதிகபட்சவிலை | ரூ.260.00 |
| சராசரி விலை | ரூ.175.94 | சராசரி விலை | ரூ.228.07 |
| குறைந்தபட்சவிலை | ரூ.140.00 | குறைந்தபட்சவிலை | ரூ.201.00 |

**பட்டு நூல் ரூ.1,725**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 21,024.00 | 21,024.00 | 21,040.00 |
| ஒரு கிராம் | 2,628.00 | 2,628.00 | 2,630.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 57,010.00 | 61,000.00 | 61,000.00 |
| ஒரு கிராம் | 61.00 | 61.00 | 61.00 |